Registered as a Newspaper in Ceylon ★★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 8 (11-3-66) இதழ் 32

விசுவாவசு மாசி 28 ஜுல்க:ஆறை 17 வெள்ளிக்கிழமை

பட்டு உடைகளை சாயம் போடுவதும் றைக்கிளீன் செய்வதும்



சன்லைட் டையேர்ஸ் அன் றைக்கிளீனேர்ஸ்

(ராணித்தியேட்டருக்கு அருகாமை)

பெரியகடை யாழ்ப்பாணம்.

போன்: 474. தந்தி: றைக்கிளீன்

## பொலிஸ் சேவைக்குப் பெண்கள்

நூற்றுக்கு மேற்பட்ட பெண் பொலிஸார் விரைவில் திரட்டப்படவிருக்கிறார்கள்.

இதற்கான விண்ணப்பங்கள் பதினெட்டு வயதிற்கும் இருபத்தொரு வயதிற்கும் இடையிலுள்ள இளம்பெண்களிடமிருந்து விரைவில் கோரப்படும். 61-ம் ஆண்டுக்குப்பின் இதுவரை பெண்களிடமிருந்து பொலிஸ்வேலைக்குவிண்ணப்பங்கள் கோரப்படவில்லை.

# வங்காளத்தில் மீண்டும் கலவரம்

## ஒரு ரயில் நிலையமும் 18 ரயில் பெட்டிகளும் தீக்கிரை

## 10 பேர் மாண்டனர்

### ஹர்த்தால் தினம் பலாத்கார சம்பவங்களுடன் ஆரம்பம்

கல்கத்தா, மார்ச் 10

மேற்கு வங்காளத்தில் இன்று மீண்டும் கலகச் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. கல்கத்தாவுக்குச் சமீபத்திலுள்ள கொனகா ரயில் நிலையம் தீவைத்துக் கொளுத்தப்பட்டது. சியால்டாவுக்கும் ஹொராவுக்குமிடையிலுள்ள ரயில் பாலமொன்றுக்கு தீ வைக்கப்பட்டது. பதினெட்டு ரயில் பெட்டிகள் தீ வைத்துக் கொளுத்தப்பட்டன. மற்றும் கல்வீச்சுச் சம்பவங்களும் இடம்பெற்றன. நிலைமையைக் கட்டுப்படுத்த பொலிஸார் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் 10 பேர் மரணமடைந்ததாகவும், பலர் காயமடைந்ததாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. சில இடங்களில் பொலிஸார் காயமுற்றனர்.

அரசாங்கத்தின் உணவுக் கொள்கையைக் கண்டித்தும் சில தினங்களுக்குமுன் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதை ஆட்சேபித்தும் இன்று ஒருநாள் ஹர்த்தால் அனுஷ்டிக்கும்படி இடதுசாரித் தலைவர்கள் வேண்டுகோள்விடுத்திருந்தனர். இன்று காலை ஆறு மணிக்கு ஹர்த்தால் ஆரம்பமானது. நண்பகல்வரை கிடைத்த செய்திகளின்படி கல்கத்தாவில் எவ்வித பெரிய சம்பவமும் நிகழவில்லை. ஆனால் பொலிஸ் வண்டிகள் மீதும் மற்றும் வாகனங்கள் மீதும் சிலஇடங்களிகல்வீச்சு நடந்தது. கல்கத்தாவில் டிராம் வண்டிகள் ஓடவில்லை. கடைகள் மூடப்பட்டிருக்கின்றன. வீதிகள் வெறிச்சோடிக்கிடக்கின்றன. சில இலாகாக்களில் அவசிய உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் காரியாலயத்திலேயே இரவில் தங்கியிருக்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. அத்தியாவசிய சேவைகள் தடைபடாமலும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வடக்கு கல்கத்தாவில் பொலிசார்மீது கல் வீசிய கும்பலொன்றைக் கலைக்கப் பொலிசார் கண்ணீர்ப் புகைப்பிரயோகம் செய்தனர். கல்கத்தா டம்டம் விமானநிலயத்தில் கிளைப் பாதை விமான சேவைகள் நடைபெறவில்லை.

கல்கத்தாவுக்கு அருகில் ரிஷ்ரா என்ற இடத்தில் பலாத்காரச் செயலில் ஈடுபடமுனைந்த கும்பலை பொலிசார் கலைத்தனர்.

(6-ம் பக்கம் பார்க்க)

## எம். பி. க்களின் சம்பள உயர்வை மந்திரிகள் சிலர் விரும்பவில்லை

கொழும்பு, வியாழன்

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கூடிய மேலதிகப்படி வழங்கப்படவேண்டுமென்று உத்தேசிக்கப்பட்டிருந்த திட்டம் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

மந்திரிசபையில் ஏற்கனவே இவ்விஷயம்பற்றி விவாதிக்கப்படும் என்று அறிவித்திருந்த போதிலும் இதுசம்பந்தமாக இன்று கூடிய மந்திரிசபை இதனை ஆராயவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

பஞ்சப்படி உயர்த்துவது பற்றி மந்திரிகளில் பலர் எதிர்மாறான கருத்துக்களைக் கொண்டுள்ளனர்.

## உலக தமிழாராய்ச்சி மகாநாட்டில் கலந்துகொள்ளும் பேராசிரியர்கள்

வெள்ளவத்தை, வியா.

மலேஷியாவில் நடைபெற இருக்கும் உலத்தமிழராய்ச்சி மகாநாட்டிடு கலந்துகொள்வதற்காக இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையைச் சேர்ந்த பேராசிரியர் வி. செல்வநாயகம், திரு. எஸ். தனஞ்செயராசசிங்கம், கலாநிதி சு. வித்தியானந்தன் புவியியற் துறையைச்சேர்ந்த விரிவுரையாளர் திரு. வி. செல்வநாயகம் ஆகியோர் பல்கலைக்கழகத்திடம் கோரியிருந்த விடுமுறை அனுமதியை வெள்ளிக்கிழமை கூடிய பல்கலைக்கழக கவுன்ஸில் அங்கீகரித்துள்ளது.

இவர்களுக்கான இலவச விமான டிக்கட்டுகள் உலகத் தமிழாராய்ச்சிக் கழகக் கமிட்டி விரைவில் அனுப்பி வைக்குமெனத் தெரியவருகிறது. தற்போது இலங்கை

(6-ம் பக்கம் பார்க்க)

# மந்திரிகளை வாங்கமுடியாது

## பார்லிமெண்டில்... ஜே. ஆர். முழக்கம்

கொழும்பு, வியாழன்

பிரதமரையும், மந்திரிகளையும் கைலஞ்சத்தினால் எவரும் வாங்கிவிட முடியாதென்று தற்காலிக பிரதமர் திரு. ஜ. ஆர். ஜெயவர்த்தன இன்று பார்லிமெண்டில் ஒத்திவைப்பு பிரேரணை ஒன்றின்மீது பேசுகையில் தெரிவித்தார்.

### நடுநிலைமை நமது கொள்கை

''எமது நாடு நடு நிலைமைக் கொள்கையை மேற்கொள்கிறது இதை யாவரும் உணரவேண்டும். நாட்டின் நிதி நிலைமை சென்ற பல வருடங்களாக சீரழிந்த நிலையில் இருக்கிறது. இதைச் சீர் செய்ய வேண்டியது எமது கடமை. இதற்கு எந்த நாட்டிடமிருந்தாவது எமக்கு உதவி கிடைத்தால் நாம் அதை எல்லாம் ஏற்றுக் கொள்வோம்'' என திரு. ஜே ஆர். ஜயவர்த்தன கூறினார்.

### சபையில் சூடு கிளம்பியது

தெகியோவத்தை எம் பி திரு. டி. பி. ஆர். வீரசேகரே மேற்கு ஜெர்மனியுடன் இலங்கைக்கு உள்ள தொடர்பை இலங்கை அரசாங்கம் துண்டித்துட மறைமுகமாகத் திட்ட

(6-ம் பக்கம் பார்க்க)

சென்றவருடத்தில்

## 96 ஆசிரியர்களுக்கு சம்பளத்துடனான லீவு!

கொழும்பு, வியா.

இலங்கைப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து பயில்வதற்காக 96 ஆசிரியர்களுக்கு சம்பளத்துடனான லீவு சென்றவருடத்தில் வழங்கப்பட்டது என உதவிக் கல்வி மந்திரி ஜனாப் எம் எம் முஸ்தபா இன்று ஜனப்பிரதிநிதிகள் சபையில் திரு லக்ஷ்மன் ஜெயக்கொடியின் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

அவர்மேலும்பதிலளிக்கையில் தெரிவித்ததாவது:-

45 வயதுக்குட்பட்ட ஆசிரியர்கள் இவ்விதம் உயர் படிப்புக்காகச் செல்வதற்கு சம்பளத்துடனான லீவு வழங்கப் படுவதுண்டு. பல்கலைக் கழகத்தில் சேர்ந்து பயில விரும்பும் ஒரு ஆசிரியர் அரசாங்க பாடசாலை அல்லது வித்தியாதிபதியின் முகாமைக்குக்கீழ் இயங்கும் பாடசாலையில் குறைந்தது ஒருவருடமாவது கடமையொற்றியிருக்கவேண்டும். எமது பாடசாலைக்கு எவ்வளவு பேர் தேவையென்பதைப் பொறுத்தும் எத்தனை ஆசிரியர்களை பாடசாலைகளிலிருந்து மேல் படிப்புக்காக அனுமதிக்கலாமென்பதைப் பொறுத்தே மேல்படிப்புக்காக ஆசிரியர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள்.

## சேர் அட்டிகலை ஓய்வுபெறுகிறார்

வெள்ளவத்தை, வியா

இலங்கைப் பல்கலைக்கழக உபவேந்தர் சர். நிக்கலஸ் அட்டிகல இன்னும் மூன்று மாத காலத்தில் ஓய்வுபெற இருக்கிறார். ஓய்வு பெறுவதற்கு முன்பாக மூன்று மாதத்திற்கான லீவு இவரது வேண்டுகோளின்பேரில் வழங்கப்பட்டுள்ளது இதற்கான அனுமதியைச் சென்ற வெள்ளிக்கிழமை நடைபெற்ற பல்கலைக்கழக கவுன்சில் வழங்கியுள்ளது.

சமீபத்தில் நடைபெற்ற பல்கலைக்கழக கலவரங்களையிட்டு நியமிக்கப்பட்ட கமிஷன் தனது சிபார்சுகளில் ஒன்றாக உபவேந்தரின் காலம் கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்பதைக் குறிப்பிட்டிருந்தது.

பல்கலைக் கழகத்தில் ஆரம்ப உபவேந்தராகக் கடமையாற்றிய காலஞ்சென்ற சேர் ஐவர் ஜென்னிங்ஸ் [illegible] இப் பதவியை [illegible] தொடர்ந்து சேர் அட்டிகல வகித்துவந்தார்.

இம் மூன்று மாத கால விடுமுறையின்போதும் சிங்களப்பகுதியின் தலைவர் பேராசிரியர் ஹெட்டியாராய்ச்சி தற்காலிக உபவேந்தராகக் கடமையாற்றுவார். இதனையும் பல்கலைக்கழகக்கவுன்சில் அங்கீகரித்துள்ளது.

## உபதலைவர் ராஜினமா

கோண்டாவில், வியா.

உடுவில் கிராமசபை உபதலைவர் திரு. ம. குமாரலிங்கம் தமது பதவியை ராஜினமாச் செய்துள்ளார். இவர் உடுவில் கிராமசபையின் ஆரும் வட்டார அங்கத்தவராவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாசகம்

தீய எண்ணங்கள் வரும்போது சிலசமயம் மனம் கூசும். உங்கள் ஆன்மீக வளர்ச்சிக்கு இது ஓர் அடையாளமாகும். முன்செய்த தீயசெயலை நினைக்கும்போதும் மனம் வேதனைப்படும் இவற்றை மீண்டும் செய்யமாட்டீர்கள். தியானத்தால் இந்த நினைப்புகள் அடங்கும்.

— சுவாமி சிவானந்தர்


# ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Office Phone: 337

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு மாசி மீ 27 உ (10-3-66)


## பரீட்சை இலாகா

ஜி. ஸி. ஈ. பரீட்சைகளில் சித்தியடைந்த மாணவர்களுக்கு அவர்களுடைய தராதரப் பத்திரம் மூன்று, நான்கு வருடங்கள் கழிந்தபின்பே கிடைக்கின்றன இதனால் பரீட்சையில் சித்தியடைந்தும் அவர்கள் வேலை வாய்ப்புப் பெறுவதில் வீண்சிரமமடைய நேரிடுகிறது. பரீட்சையில் சித்தியடைந்ததற்கான பத்திரம் காலதாமதமின்றிக் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக வெளிவந்த செய்தி பலருக்கும் ஆறுதலளிக்கும்.

ஜி. ஸி. ஈ. பரீட்சை மட்டுமல்ல அரசாங்கம் நடத்தும் பரீட்சைகள் பலவும் கல்வி இலாகாவின் ஒரு பிரிவாக விளங்கும் பரீட்சை இலாகாவினால் நடத்தப்படுகின்றன. ஜி. ஸி. ஈ. பரீட்சைக்குத் தோற்றும் மாணவர் தொகையோ வருடா வருடம் பெருகிக்கொண்டே வருகிறது. பரீட்சை இலாகாவின் வேலைப்பழுவும் அதிகரித்துள்ளதென்பதையும் மறுக்கமுடியாது. பரீட்சை இலாகாவின் உத்தியோகத்தர், ஊழியர் தொகை அதிகரிக்கப்பட்டாலும்கூட பரீட்சை முடிவுகளை விரைவாகவெளியிடுவதோ தராதரப்பத்திரங்களைக் குறுகிய காலத்துக்குள் அனுப்புவதோ சுலபமல்ல.

விஞ்ஞானம் வளர்ச்சியடைந்துள்ள இக்காலத்தில் முன்னேற்றமடைந்த நாடுகளில் மனிதன் செய்யும் பல வேலைகளும் யந்திர சாதனத்தின் உதவியுடன் மிகவிரைவாகச் செய்துமுடிக்கப்படுகின்றன.

நமது பரீட்சை இலாகாவுக்கும் யந்திரசாதனங்கள் வழங்கப்பட்டு அவற்றின் உதவியுடன் பரீட்சை முடிவுகளை விரைவாக வெளியிடவும் தராதரப் பத்திரங்களை பரீட்சை நடந்த அதே வருடத்துக்குள் அனுப்புவதற்கும் வழிசெய்யவேண்டும்.

பரீட்சை இலாகாவின் மீது குறைகூறுவதற்கு இடமில்லாமல் கல்வி அமைச்சு இந்த வசதிகளைச் செய்துகொடுப்பதன் மூலம் இளம் சந்ததியினரின் பாராட்டையும், வாழ்த்தையும் பெற முடியும்.

## இந்தோனேஷிய சம்பவங்கள்

முற்பகலில் செய்தவினை பிற்பகலில் விளையுமென்பர். இந்தோனேஷியாவில் இன்று நிகழும் சம்பவங்கள் இதை நிரூபிக்கின்றன.

இந்தோனேஷிய மந்திரிசபையை அதிபர் சுகர்ணோ சில தினங்களுக்கு முன் மாற்றியமைத்தார். தோல்வியில் முடிந்த புரட்சிக்குப்பின் மந்திரிசபையில் செய்யப்பட்ட இந்த மாறுதல் புரட்சியின் பின் கம்யூனிஸ்டுகள் மீது ஆத்திரமடைந்திருக்கும் இந்தோனேஷியர் பலருக்குத் திருப்தி அளிக்கவில்லை. மந்திரிசபையில் கம்யூனிஸ்டுகள் நுழைந்துவிட்டதாகவும் அவர்களை வெளியேற்ற வேண்டுமென்றும் கோரி மாணவர்கள் ஆயிரக்கணக்கில் ஆர்ப்பாட்டம் செய்துவருகின்றனர். உலகநாடுகள் பலவற்றில் நிகழ்ந்துள்ள பல சம்பங்களிலும் வெளியார் தலையீடு இருந்திருப்பதைப் போன்று இந்தோனேஷிய புரட்சி முயற்சிகளுக்கும் அதன் பின் நடைபெறும் சம்பவங்களுக்கும் தலையீடுகள் காரணமாக இருக்கலாம். கல்விஅமைச்சு, நவசீன செய்தி ஸ்தாபனக் காரியாலயம், சீன தூதரகம் முதலிய கட்டிடங்களில், ஆர்ப்பாட்டம் செய்துவரும் ஆயிரக்கான மாணவர்கள் நுழைந்து, கட்டிடங்களுக்கும் தளபாடங்களுக்கும் சேதம் விளைவித்துள்ளதுடன் பல முக்கிய தஸ்தாவேஜுகளையும் அழித்துள்ளனர். நோக்கம் எதுவாயிருப்பினும் எந்த நாடாயிருப்பினும் மாணவரின் இச்செயல்களை எவரும் வரவேற்கமுடியாது. ஆனால் இந்தோனேஷிய மாணவர்களைப் பொறுத்தவரையில் இச்சம்பவங்களில் அவர்களை முழுக்கமுழுக்கக் குற்றம் சொல்ல முடியாது. இதற்குமுன் இந்தோனேஷியாவில், அமெரிக்க எதிர்ப்பு, பிரிட்டிஷ்எதிர்ப்பு, இந்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் பலாத்காரச் செயல்களுடன் மாணவர்களால் தான் நடத்தப்பட்டன. அப்பொழுது இந்தோனேஷியத் தலைவர்கள் அதற்கு ஆதரவளித்தனர். அன்றே அவற்றைக் கண்டித்து முற்றுப்புள்ளி வைக்கப்பட்டிருந்தால் இன்றுதங்கள் கட்டிடங்களுக்கும் சொத்துக்களுக்கும் கேடு விளைந்திருக்காது இந்தோனேஷிய மாணவர்களின் ஆர்ப்பாட்டச் சம்பவங்கள், மாணவர்களைப் பலாத்காரச் சம்பவங்களுக்குத் தூண்டிவிடும் அரசியல்வாதிகளுக்கு அவர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்களாயினும், அவர்களுக்கு ஒரு படிப்பினையாக இருக்கவேண்டும்,

### ஜி.ஜி.க்கு வரவேற்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி ஜி. பொன்னம்பலத்தை கௌரவிக்குமுகமாக உடுவில் தொகுதி பொதுமக்கள் சார்பில் மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வீதியில் இம்மாதம் 25-ம் திகதி வரவேற்பளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன.

மானிப்பாய் தெற்கு ஆலடி சந்தியிலிருந்து திரு ஜி. ஜி. பொன்னம்பலம் மேள வாத்திய, கிராமிய நடனங்களுடன் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுவார்.

# கல்வி நிலையங்களுக்கு மக்கள் நன்கொடை அவசியம்

சாவகச்சேரி, வியாழன்

பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றபின் கல்வி பூரணமாக அரசாங்கத்தின் பொறுப்பிலேயே உள்ளது என மக்கள் எண்ணிக் கல்விநிலையங்களுக்கு எவ்வித உதவியும் புரிவதற்கு பின்வாங்குகின்றனர்கள். பாடசாலைகள் தங்கள் பிள்ளைகளின் நலனுக்காகவே நடாத்தப்படுகின்றன என்பதை அவர்கள் மறந்து போகின்றனர்.

சாவகச்சேரி மகளிர் கல்லூரி வருடாந்த பரிசளிப்பு விழாவில் கல்லூரி அதிபர் திருமதி இராசலட்சுமி வைத்திலிங்கம் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்துப் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது: கொடையாளரும், ஈகையாளரும் கல்விச்சாலைகளைக் கட்டியும் தளபாடங்களை வாங்கியும் மானியங்களைத் தாராளமாக உதவியும் வந்தகாலம் உண்டு. அதனால் அரசாங்கமும் மக்களும் ஒத்துழைத்தகாலை கல்வி நன்கு முன்னேறியது. ஆனால் இன்றோ கல்வியை அரசாங்கத்தின் கையில் விட்டுவிடுவதே நல்லது என்ற தவருன கருத்தினால் கல்வி கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. கல்விக்குத் தேவையான முழுநிதிப் பொறுப்பையும் சுமப்பது எந்த அரசாங்கத்துக்கும் அப்பாற்பட்டதாகும். ஆகவே மக்கள் முன்னர் போல் உதவ முன்வராவிட்டால் அவர்களுடைய குழந்தைகளே பாதிக்கப்படுவார்கள்.

தன் மொழிமூலம் போதனை என்ற மாற்றம் கல்வியின் சிறந்த ஒருகொள்கைக்கு இசைவானது. ஒரு குழந்தை தன் தாய்மொழி மூலம் பயிற்றப்படும்போது அறிவை இலகுவாக ஈட்டிக்கொள்கிறது. பொருத்தமான பாடசாலை நூல்கள் இல்லாக்குறையால் எங்கள் பாடசாலைகளில் தாய்மொழிமூலம் கல்வியைப் பயனுள்ளதாக்க முடியாமலிருக்கிறது.

தென்மராட்சி மட்டுமல்ல வவனியாவரை பரந்த பிரதேசத்துப் பெண்பிள்ளைகளின் உயர்கல்விக்கு சாவகச்சேரி மகளிர் மகாவித்தியாலயம் ஒன்று மட்டுமே இருந்தும், ஆரம்பவகுப்புகளிலிருந்து பல்கலைக்கழகப் புகுமுக வகுப்புகள்வரை நடாத்தப் போதிய இடவசதியில்லை.

### 'படித்தபடி நடக்கவேண்டும்'

யாழ்ப்பாணம், வெள்ளி

''ஒவ்வொரு வீடுகளிலும் திருக்குறள் ஏடு இருக்கவேண்டும். ஒவ்வொருவரும் ஒருநாளைக்கு ஒரு குறளையாவது படிக்கவேண்டும். படிக்கும் குறள்களின் கருத்தை நன்ருகப் புரிந்துகொள்ள வேண்டும். புரிந்துகொண்டால்மட்டும் போதாது. அதன்படிநடக்கவேண்டும்'' என்று செல்வன் சி. தில்லை நடராசா இந்துக்கல்லூரியில் நடைபெற்ற திருவள்ளுவர் குருபூசையின்போது பேசுகையில் குறிப்பிட்டார்.

கல்லூரி மாணவர்களான செல்வன் க. கணபதிப்பிள்ளையும், செல்வன் கனக. சேனதிராசாவும் சொற்பொழிவாற்றினர்கள்.

யாழ். இந்துக்கல்லூரி இந்து மகளிர் மன்றத்தின் சார்பில் செல்வி குகசோதி சிவபாதசுந்தரம் ''வள்ளுவர் வகுத்த இல்லறம்'' என்னும்பொருள் பற்றியும், செல்வி ஜெயக்குமாரி சண்முகநாதன் 'திருவள்ளுவர்' என்னும் பொருள்பற்றியும் சொற்பொழிவாற்றினர்கள்.

### சமாதான நீதவானுக்கு எம். பி. பாராட்டு

யாழ்ப்பாணம், வியா

சமாதான நீதவானக அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்ட திருநெல்வேலி வடக்கைச் சேர்ந்த திரு. தம்பாப்பிள்ளை இராமுப்பிள்ளைக்கு திருநெல்வேலி பொதுமக்கள் சார்பில் வரவேற்பளிக்கப்பட்டது.

திருநெல்வேலி கலாமன்றத்தில் நடைபெற்ற இவ்விழாவுக்கு நல்லூர் எம் பி. டாக்டர் ஈ. எம் வி நாகநாதன் தலைமைவகித்தார். டாக்டர் நாகநாதன் தமது தலைமையுரையில் திரு. இராமுப்பிள்ளை தமிழ்ச்சமுதாயத்திற்குப் பல சேவைகள் புரிந்தவரென்றும், அவரது சமூகத்தொண்டைக் கௌரவித்தே அரசாங்கம் அவருக்கு இப்பதவியை வழங்க முன்வந்ததென்றும், காலிமுகத்திடலில் நடந்த சத்தியாக்கிரகத்தில் திருநெல்வேலிமக்கள் சார்பில் அவர் ஒருவரே பங்குபற்றினரென்றும் கூறினர். திருவாளர்கள் எம். ஆலாலசுந்தரம், எஸ். பொன்னையா, புதுமைலோலன் உட்பட மற்றும் பலர் அவரது சேவையைப் பாராட்டினர்.

### வரவேற்பு விழா

யாழ்ப்பாணம், வெள்ளி

சமாதான நீதவானக நியமனம் பெற்ற திரு. வே. கிருஷ்ணபிள்ளையை பாராட்டுமுகமாக இன்று மாலை கொக்குவில் மேற்குஸ்ரீஞான பண்டித மகாவித்தியாலய மண்டபத்தில்திரு. த. குமாரசாமிப்பிள்ளையின் தலைமையில் ஒரு வரவேற்பு விழா நடைபெறும்.

(5-ம் கலத் தொடர்ச்சி)

கோதுமைத் தட்டுப்பாடு இருந்தது. இன்று இந்தியாவில் உண்டான உணவுப் பஞ்சத்தைநீக்க அமெரிக்கா முன்வந்திருக்கிறது. அந்தளவுக்கு அந்நாட்டில் உணவு உற்பத்தி பெருகி, தங்கள் சுயதேவையைப் பூர்த்தி செய்துகொண்டு, பிறநாடுகளுக்கும் உதவியளிக்குமளவில் விளைச்சல் அதிகரித்துள்ளது. இதை அமெரிக்கா எப்படிச் சாதித்ததென்று பார்க்கப்போனல் அங்கேயுள்ள கமக்காரர் கூடுதலான செயற்கை உரத்தைப் பாவிப்பதே காரணமென்று புலப்படுகிறது. உணவுத்தட்டுப்பாட்டை நீக்குவதற்கு அவர்கள் கூடுதலான நிலத்தில் கமம் செய்யவில்லை. இருக்கிற நிலத்தில் அதிகமான உரத்தை, அதுவும் நைட்ரஜன் சத்து மிகுதியாகவுள்ள உரத்தை, உபயோகித்தார்கள். சுயதேவைக்கும் மேலதிகமாக நிலம் விளைந்தது. வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்கிருர்கள்.

நம் நாட்டில் செயற்கை உரம் போடும்படி விவசாய இலாகாவும், பிறரும் எவ்வளவுதான் பிரசாரம்செய்தாலும் நிலம் பழுதாகிவிடுமென்று பயந்து உரம் போடாமல் விடுபவர்களின் மடமையை என்னவென்று கூறுகிறது?

— கலப்பை

## களத்து மேடு

ஆசியாக்கண்டத்தில் அளவுக்கதிகமான ஆட்கள் அளவுக்கதிகமாகப் பாடுபட்டு மிகக் குறைவான அரிசியை உற்பத்தி செய்கிருர்களென்று இலங்கையில் நிலப்பண்பாடு விஞ்ஞானியாகிய திரு. பொன்னம்பெருமா கூறியிருக்கிருர். இது எவ்வளவு உண்மை பாருங்கள். இரவுபகலாகப் பாடுபடுகிருேம், நிலத்தை உழுகிருேம், கொத்துகிருேம், குப்பைகூளங்களை வயலில் கொண்டு போய் கொட்டுகிருேம், களை பிடுங்குகிருேம்-கடைசியில் கிடைப்பதென்ன? முக்கிமுக்கிப் பார்த்தாலும் பரப்புக்கு இரண்டு பறை நெல் விளைவதே கஷ்டமாயிருக்கிறது.

இந்த முறை. யாழ்ப்பாணத்து நெல் வேளாண்மை மெத்த அருமையாக வரப்போகிறதென்று எல்லோரும் வாய்நிறையப் புழுகிக்கொண்டிருந்தோம். வேளாண்மை குறைந்துவிட்டால் வழக்கமாக மழையின்மீது தான் குற்றத்தைப் போடுவோம். ஆனல் இந்த வருடம் மழை ஒழுங்காக நேரத்துக்கு நேரம்பெய்துகொடுத்தது வெள்ளத்தால் அழிவு உண்டாகவில்லை. கச்சான் காற்று அடிக்கவில்லை. வெய்யிலினல் பயிர் காய்ந்து போகவில்லை. இப்படியெல்லாம் சுகமான வசதிகள் இருந்தும்கூட விளைச்சல் 'கூகா' என்று கூச்சலிடக்கூடிய அளவுக்கு வரவில்லை. பரப்புக்கு இரண்டு பறை நெல்கூட சராசரியாக விளையவில்லை.

இதற்கென்ன பரிகாரம் என்று நினைக்கிறீர்கள்?

ஜப்பானில் 1959-ம் ஆண்டு ஓர் ஏக்கரில் 12,200 ருத்தல் அரிசி விளைந்ததென்ற அதிர்ச்சி மிக்கசெய்தியைக் கேள்விப்பட்டேன். ஒரு கொத்து நெல்லில் அரைக்கொத்து அரிசி என்றும், ஒரு கொத்து அரிசி இரண்டு ருத்தல் என்றும் கணக்குப் பார்த்தால் இது ஏக்கருக்கு 381 புசல் நெல் ஆகிறது. உலகத்திலேயேஜப்பானியர்தான் அரிசி உற்பத்தியில் மிகவும் முன்னேற்றமானவர்கள் என்பது உண்மையாயினும் ஏக்கருக்கு 381 புசல் என்ருல் அது மனத்தை ஒரு கலக்குகலக்குகிறதல்லவா? இதோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது நம் நாட்டில் சராசரி நெல் விளைச்சல் இன்று ஏக்கருக்கு 40 புசல்கூட இல்லை. யாழ்ப்பாணத்தில் இந்த வருடத்திலும்கூட சராசரிகணக்குப் பார்த்தால் ஏக்கருக்கு 25 புசல்கூட விளையவில்லை. இந்தியாவிலும் சராசரி விளைச்சல் ஏக்கருக்கு 27 அல்லது 28 புசலாகவே இருந்து வருகிறது.

விதைநெல் தெரிவு செய்தல், நாற்றுமேடை போடுதல், களைபிடுங்குதல், பசளையிடுதல், பூச்சிமருந்து அடித்தல், நவீன யந்திரங்களை உபயோகித்தல் முதலிய விஷயங்கள் எல்லாவற்றிலும் ஒரு பெரிய புரட்சி ஏற்பட்டாலன்றி நமது நெல் விளைச்சலை அதிகரித்துக் கொள்ள முடியாது. இவற்றினுள்ளும் மிகமிக முக்கியமானது சிறந்த பொருத்தமான பசளை போடுதலே.

நம்மூரவர்கள் நல்ல பசளையாகிய மாட்டெருவைத் தோட்டக்காரருக்கு விற்றுவிட்டு பழைய ஓலை, குப்பை முதலியவற்றைத்தான் நெல்வயல்களுக்குப் போடுகிருர்கள். மரம் செடிகளிலுள்ள பச்சைக் குழையும் நெல்லுக்குச்சிறந்தபசளையாகும். ஆனல் அதைக்கூட புகையிலைத் தோட்டக்காரருக்கு விற்றுவிடுகிருேம்.

பதினைந்து வருடங்களுக்கு முன்பு அமெரிக்காவில்கூட

(4-ம் கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீக்கியர்களுக்கு தனிராஜ்யம் கிடைத்தது

## காங்கிரஸ் காரியக்கமிட்டி நிறைவேற்றிய தீர்மானம்

### பஞ்சாபிசுபா கோரிக்கை வெற்றி; அரசியல் தலைவர்கள் வரவேற்பு

### ஆனல் இதைஎதிர்த்துஜனசங் தலைவர்சாகும்வரை உண்ணாவிரதம்

புதுடில்லி, மார்ச் 10

**சீக்கியர்களுக்கு தனி பஞ்சாபி ராஜ்யம் அமைப்பதற்கு ஆகவேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இந்திய அரசாங்கத்தை ஆளும் கட்சியான காங்கிரஸ் காரியக் கமிட்டி நேற்றுக் கேட்டுக்கொண்டது.**

இப்பொழுதுள்ள பஞ்சாப் ராஜ்யத்திலேயே பஞ்சாபி மொழி பேசும் பஞ்சாபி ராஜ்யம் ஒன்றை உருவாக்குவதென்றும் இப்பொழுதுள்ள பஞ்சாபி ராஜ்யத்துக்கு வெளியிலுள்ள பகுதி எதையும் பஞ்சாபி மொழி தனி ராஜ்யத்தில் சேர்ப்பதில்லையென்றும் காரியக் கமிட்டி தீர்மானித்தது. பஞ்சாபி மொழி தனி ராஜ்யம் அமைப்பதென்றகாங்கிரஸ் காரியக்கமிட்டியின் தீர்மானத்தை இந்திய ஜனசங் கட்சியைத் தவிர இதர அரசியல் கட்சித் தலைவர்கள் அனைவரும் மகிழ்ச்சியுடன் வரவேற்றுள்ளனர். பஞ்சாபி மொழி தனி ராஜ்யம் அமைக்கும் தீர்மானத்தை ஆட்சேபித்து ஜனசங் கட்சிப் பொதுக் காரியதரிசி திரு. சர்மா காலவரையறையின்றி உண்ணாவிரதம் ஆரம்பித்துள்ளார்.

காங்கிரஸ் காரிக் கமிட்டி நேற்று மாலை புதுடில்லியில் கூடி இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியது. மூன்று மணி நேரம் நடைபெற்ற இக்கூட்டத்தில் காரியக் கமிட்டி அங்கத்தவர்களுடன் பிரதமர் திருமதி இந்திராகாந்தி, காங்கிரஸ் அக்கிராசனர் திரு. கே. காமராஜ் ஆகியோரும் விசேஷ அழைப்பின்மீது வெளிவிவகார மந்திரி திரு. சுவர்ண் சிங், உணவு மந்திரி திரு. ஸி. சுப்பிரமணியம், திரு. வி. கே. கிருஷ்ணமேனன், திரு. யு. என். தேபர், பஞ்சாப் முதன் மந்திரி திரு. ராம்கிஷன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

#### நிறைவேற்ற வேண்டியதுதான்

இப்பொழுதுள்ள பஞ்சாப் ராஜ்யத்தில் பஞ்சாபி மொழி பேசும் தனி ராஜ்யமொன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என்ற காரியக் கமிட்டியின் தீர்மானத்தைப் பற்றி, கமிட்டிக்கூட்டம் முடிந்த பின் பத்திரிகை நிருபர்களிடம் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அபிப்பிராயம் தெரிவிக்கையில், ''காரியக்கமிட்டி தீர்மானத்தை இனி நாங்கள் நிறைவேற்றவேண்டியதுதான்'' என்றார்.

#### தற்கொலை மிரட்டல்

'பஞ்சாபி சுபா என்ற சீக்கியர்களின் தனிராஜ்யக் கோரிக்கைக்கு அரசாங்கம் இணங்க மறுத்தால் தாம் அடுத்த மாதம் தற்கொலை செய்துகொள்ளப்போவதாக சீக்கியர் தலைவர் சன்பத்தேசிங் அறிவித்திருந்தார். இதற்கு முன்னும் அவர் பஞ்சாபி சுபாக் கோரிக்கைமீது உண்ணாவிரதமிருந்ததுடன் தற்கொலை செய்யப்போவதாகவும் பயமுறுத்தியிருந்தார். பாகிஸ்தான் சண்டை காரணமாக அவர் உண்ணாவிரதத்தை நிறுத்தியிருந்ததுடன் தற்கொலைத் தீர்மானத்தையும் ஒத்திவைத்திருந்தார்.

#### ஜனசங் எதிர்ப்பு

தனி பஞ்சாபி ராஜ்யம் அமைக்கும் நாட்டின் ஐக்கியத்தையும் தேசிய ஒருமைப்பாட்டையும் விரும்புபவர்களுக்கு பலத்த அடி என்று ஜனசங் கட்சித் தலைவர்கள் தெரிவித்துள்ளனர். ஜனசங் பொதுக் காரியதரிசி திரு. சர்மா தனி பஞ்சாபி ராஜ்யம் அமைக்கும் தீர்மானத்தை எதிர்த்து நேற்று முதல் உண்ணாவிரதமிருக்கிறார்.

#### அபிப்பிராயம் கூற மறுப்பு

பஞ்சாபி சுபாக்கோரிக்கையை முன் வைத்துபோராட்டம் நடத்திய சீக்கியர் தலைவர்களான சன்பத் தேசிங்கும், மாஸ்டர் தாராசிங்கின் நண்பர்களும் காங்கிரஸ் காரியக்கமிட்டியின் தீர்மானத்தைப் பற்றி இப்பொழுது அபிப்பிராயம் தெரிவிக்க மறுத்துவிட்டனர்.

சுதந்திராக்கட்சித் தலைவர் டாக்டர் என். ஜி. ரங்கா, பிரஜா சோஷலிஸ்ட் கட்சித் தலைவர் மற்றும் அரசியல் கட்சித் தலைவர்களும் காங்கிரஸ் காரியக்கமிட்டியின் தீர்மானத்தை வரவேற்றிருக்கின்றனர்.

## அனுமதி மறுப்பு கருணாநிதிக்கு

### மலாயா செல்வதற்கு!

சென்னை, மார்ச் 10

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களில் ஒருவரும் தமிழ்நாடு சட்டசபையின் உதவிஎதிர்க் கட்சித் தலைவருமான திரு. மு. கருணாநிதி மலாயா செல்வதற்காக 'பாஸ்போர்ட்' கோரிச்



செய்த மனுவை அரசாங்கம் நிராகரித்துவிட்டது.

கோலாலம்பூர் இளைஞர் கழகத்தின் அழைப்பின்மீது மலாயாவில் ஆறு மாதங்கள் சுற்றுப்பிரயாணம் செய்வதற்கு திரு. கருணாநிதி திட்டமிட்டிருந்தார்.

## உயிருடன் புதையுண்டனர்

ராவல்பிண்டி, மார்ச் 10

பனிப்பாறைசரிவுஒன்றில் எட்டுக் கிராமத்தவர்கள் உயிருடன் புதைக்கப்பட்ட பரிதாபகரமான சம்பவமொன்று இங்கு நிகழ்ந்துள்ளது.

## ரயில் பாலத்துக்கு தீவைப்பு

கல்கத்தா, மார்ச் 10

உணவுக் கிளர்ச்சி கலகமாக மாறிச் சேதம் விளைக்கப்பட்ட கல்கத்தாவிலும் அதன் சுற்றுப்புறநகர்களிலும் தொடர்ந்து அமைதி நிலவுகிறது. பகலில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்ட கிருஷ்ண நகரில் நேற்றுப் பகல் ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்டிருந்தது.

நேற்று பரக்பூர் பகுதியில் ரயில்நிலைய மேல் பாலத்திற்கு ஆர்ப்பாட்டக்காரர் கோஷ்டியொன்று தீ வைத்ததனல் பாலத்திற்குச் சிறிது சேதம் ஏற்பட்டது.

நேற்றும் ஏழு இடதுசாரித்தலைவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

## அமெரிக்கத் தளங்களை பிரான்ஸ் தனதாக்க முடிவு

பாரிஸ், மார்ச் 10

பிரான்சிலுள்ள அமெரிக்க, கனடிய தளங்கள் அனைத்தையும் பிரான்ஸ் படிப்படியாக தனதாக்கிக்கொள்ள முடிவுசெய்துள்ளது. பிரான்ஸில் இருபது அமெரிக்கத் தளங்களும் உள்ளன.

பிரான்சிலுள்ள அமெரிக்கத்தளங்கள் யாவும் பிரான்ஸின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்க வேண்டுமென அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜோன்சனுக்கு பிரஞ்சு ஜனாதிபதி டிகோல் எழுதிய கடிதத்தில் கேட்டிருந்தார். இதற்குச் சம்மதிக்க முடியாதென திரு. ஜோன்சன் எழுதிய பதில் கிடைத்தபின் தளங்களைப் படிப்படியாக எடுத்துக்கொள்வதென பிரஞ்சு அரசாங்கம் தீர்மானித்தது.

பிரான்சின் சுயநிர்ணய உரிமையைக் காப்பாற்றவும் பிரான்சின் பாதுகாப்புக்காகவும் வடஅத்திலாந்திக் ஒப்பந்த ஸ்தாபனத்திலிருந்தும் பிரான்ஸ் தனது படைகளை திருப்பி அழைத்துக் கொள்ளுமென்றும் வடஅத்திலாந்திக் ஒப்பந்த ஸ்தாபனத்திலிருந்து பிரான்ஸ் விலகிவிடாது என்றும் அறியப்படுகிறது.

அவசியமான சந்தர்ப்பங்களில் நேசநாடுகளுடன் பிரான்சும் சேர்ந்து படை நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தயாராக இருக்குமென்றும் பிரஞ்சு அரசாங்கம் தெரிவித்துள்ளது.

## வியட்னும் குண்டுவீச்சை நிறுத்த யுதாண்ட் கோரிக்கை

நியுயோர்க், மார்ச் 10

வியட்னும் பிரச்னைக்கு ஒரு தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு முன்னோடி நடவடிக்கையாக வடவியட்னமில் குண்டுவீசுவதைநிறுத்த வேண்டுமென ஐ. நா. தலைமைக் காரியதரிசி யுதாண்ட் கேட்டுள்ளார்.

வியட்னும் சமாதானப் பேச்சுவார்த்தைகளில்வியட்காங்கியரின் பிரதிநிதிகளும் கலந்துகொள்ள அனுமதிக்கப்பட வேண்டுமென்றும் அவர் கேட்டுள்ளார்.

வியட்னும் சண்டையிலீடுபட்டுள்ள இருதரப்பினரும் சமாதானப்பேச்சுவார்த்தைகளுக்குச் சந்தர்ப்பமளிக்குமுகமாக தங்கள் இராணுவ நடவடிக்கைகளை கட்டுப்படுத்தவேண்டுமென்றும் துருப்புக்களின் தொகையைக் குறைக்க வேண்டுமெனவும் யுதாண்ட் கேட்டுள்ளார்.

#### 8000 பேர் மாண்டனர்

இந்த வருடத்துக்குள் எண்ணாயிரம் வியட்காங்கியர் கொல்லப்பட்டதாக அமெரிக்கப் பாதுகாப்பு மந்திரி மக்னமரா தெரிவித்திருக்கிறார். வடவியட்னும் தகவல், போக்குவரத்துத் தொடர்புகளை நாசமாக்குவதற்கான குண்டுவீச்சு நடவடிக்கைகளை அமெரிக்கா அதிகரித்திருப்பதாகவும் மக்னமரா தெரிவித்தார்.

#### ஜப்பான் முயற்சி

ஜப்பான் பிரதமரின் விசேஷ பிரதிநிதி திரு. யோக்போயாமா லண்டனுக்குச் சென்று பிரிட்டிஷ் வெளிவிவகார மந்திரியுடன் வியட்னும் பிரச்னை பற்றிப் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார். இந்தோசீனவுக்கான 1954-ம் வருடத்திய ஜெனிவா மகாநாட்டுக்கூட்டுத்தலைவர்களில் பிரிட்டனும் ஒன்றுகும்.

இந்தோனேஷியா

## மாணவர் ஆர்ப்பாட்டம் நீடிக்கிறது; ஒருவர் பலி

ஜாகர்த்தா, மார்ச் 10

இந்தோனேஷிய மந்திரிசபையில் கம்யூனிஸ்ட்கள் நுழைந்துவிட்டதாகவும் மந்திரிசபையை மாற்றியமைக்கவேண்டுமெனவும் வெளிவிவகாரமந்திரி டாக்டர் சுபந்திரியோவை நீக்க வேண்டுமெனவும் கோரி ஜாகர்த்தாவில் மாணவர் நடத்திவரும் ஆர்ப்பாட்டம் இப்பொழுது இதர இடங்களுக்கும்பரவத் தொடங்கியுள்ளது. இந்த ஆர்ப்பாட்டத்தில் நேற்று முதல் தடவையாக தொழிற் சங்கங்களும் கலந்துகொண்டன. தொழில் மந்திரி ஒரு கம்யூனிஸ்ட்என்றும் அவரை விலக்க வேண்டுமெனவும் தொழிலாளர் கோருகின்றனர்.

நேற்று ஆர்ப்பாட்டம் செய்த மாணவர்கள் ஆயிரக்கணக்கில் கல்வி அமைச்சு வெளிவிவகார அமைச்சு ஆகியவைகளில் புகுந்து காரியாலயங்களைச் சேதப்படுத்தியதுடன் புது சீனச் செய்திஸ்தாபனத்தின்கிளைக் காரியாலயத்தினுள்ளும் நுழைந்து சேதம் விளைத்தனர்.

இந்தஆர்ப்பாட்டங்களின் போது பொலிசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் பல்கலைக் கழக மாணவர் ஒருவர் கொல்லப்பட்டார்.

## கம்போடியா ஆதரவு

கானு, மார்ச் 10

கானுவில் நிகழ்ந்த சம்பவம் ஆசிய - ஆபிரிக்க ஒற்றுமையைப்பலவீனப்படுத்துவதோடு, ஏகாதிபத்திவாதிகளின் கையை ஓங்கச் செய்வதாகுமென கம்போடிய இளவரசர்சிகானுக் டாக்டர் நிக்ருமாவிற்கு அனுப்பியுள்ள ஒருசெய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

டாக்டர் நிக்ருமாவிற்கு கம்போடியாவின் முழுஆதரவையும் இளவரசர் இச் செய்திமூலம் தெரிவித்து கானு மீண்டும் அமைதியையும் சமாதானத்தையும் பெற்று, முன்போல ஆசிய-ஆபிரிக்க நாடுகளிடையே அதன் இடத்தைப் பெறுமென்றும் கூறியுள்ளார்.

## 'டாண்ட்வாக்' தேச உடைமை

ஜாகர்த்தா, மார்ச் 10

ஜாகர்த்தாவிலுள்ள [illegible] அமெரிக்க எண்ணெய்க் கம்பனியான [illegible] டாண்ட்வாக் கம்பனியை இந்தோனேஷிய அரசாங்கம் தன்னுடைமையாக்கிக்கொண்டது.

## சாரணருக்கு கௌரவம்

லண்டன், மார்ச் 9

பிரபல பிரிட்டிஷ் சாரணரும் லண்டனுக்கு அருகிற உள்ள பிரக்கியாதிபெற்ற சர்வதேச சாரணர் பயிற்சி முகாமையச் சேர்ந்தவருமான திரு. ஜோன் தேர்மனுக்கு இலங்கையின் பிரதம சாரணரான திரு. ஈ. டபிள்யு. கன்னங்கரா ''வெள்ளிச் சிங்க'' விருது வழங்கி அவரைக்கௌரவிக்கிறார். விருது வழங்கும் வைபவம் வெகு விரைவில் லண்டனில் நடைபெறும்.

## 900 அமெரிக்க விமானங்கள் சுடப்பட்டன

டோக்கியோ, மார்ச் 10

இம்மாதம் 7-ம்தேதிவரை வடவியட்னமில் சுட்டுவீழ்த்தப்பட்ட அமெரிக்க விமானங்களின் மொத்தத் தொகை 900 என, வடவியட்னும் இராணுவ அறிக்கையின்மூலம் அறியப்படுகிறது.

நேற்று வெளியிடப்பட்டுள்ள அந்த அறிக்கையில், அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளை, நிலத்திலும் ஆகாயத்திலும், எதிர்த்துப் போராட இராணுவமும் பொதுமக்களும் சகல நடவடிக்கைகளும் எடுத்திருப்பதோடு திடமாக இருக்கிறார்களென்றும் கூறப்பட்டுள்ளது.

## பிரிட்டிஷ் விமானப் படைத்தலைவர்

லண்டன், மார்ச் 9

பிரிட்டிஷ் விமானப் படையின் தலைவரான சேர் சாள்ஸ் எல்வோர்தி இம்மாதம் 12-ந்தேதி இலங்கை வருகிறார். இரண்டுநாட்கள் இங்கு தங்கியிருப்பார். இலங்கை விமானப்படைத் தலைவரான திரு. ரோகன் அமரசேகராவும் மற்றும் விமானப்படை அதிகாரிகளும் சேர். சாள்ஸ் எல்வோர்திக்கு இம்மாதம் 13-ந்தேதி வரவேற்புபசாரம் அளிப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைத்தறியாளர் கஷ்டம்

யாழ்ப்பாணம், வியா.

சாவகச்சேரிப் பகுதியில் நூற்றுக்கணக்கான கைத்தறியாளர் கடந்த ஒரு மாத காலமாக நூல் பெற முடியாமல் வேலையிழந்துள்ளனர்.

முன்பு தனிப்பட்ட ஸ்தாபனங்கள் நூல் இறக்குமதி செய்தபோது நூல் தட்டுப்பாடு ஏற்படவில்லையென்றும், தற்பொழுது கோட்டா முறையில் நூல் இறக்குமதி செய்யப்படுவதால் இந்நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

### வட்டுக்கோட்டையில்

வட்டுக்கோட்டைப் பகுதிகளில் உள்ள நெசவு நிலையங்களிலும் நூல் பெற முடியாத காரணத்தால் மாணவர்கள் வேலை செய்ய முடியாத நிலையிலுள்ளனரென்றும் அறியப்படுகிறது.

REGAL—JAFFNA
NOW SHOWING!
Walt Disney's
JUNGLE CAT
(Technicolor)

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி-6-30, 9-30 மணி
விடுமுறை நாட்களில் 2-30 மணி
சிவாஜி - பண்டரிபாய்
நடித்த
திரும்பிப்பார்

ராஜா
(யாழ்ப்பாணம்)
4-.45 7-00க்கு மட்டும்
டெவில் இன் த பிளெஷ்
(வயது வந்தவர்கட்கு மாத்திரம்)
9-4-க்கு மட்டும்
பீஸ் சால் பாட்

## 'பாடங்களைக் குறைக்கவும்'

யாழ்ப்பாணம், வியா.

கொழும்புத்துறை ஆசிரிய பயிற்சிக் கல்லூரி ஆசிரிய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம் சங்கத் தலைவர் திரு. கா. கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

உயர்வகுப்பு மாணவர்களுக்கான 13 பாடங்களை எட்டாகக் குறைக்கும்படி கல்விமந்திரிக்கும் உதவி வித்தியாதிபதிக்கும், எம். பிக்களுக்கும் தந்திமூலம் தெரிவிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது. இதுபற்றி இலங்கையிலுள்ள தமிழ்-சிங்கள ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகள் எல்லாவற்றுடனும் தொடர்புகொள்வதென்வும் தீர்மானிக்கப் பட்டது.

வியட்னும் பிரச்னையில்

## கெய்ரோவின் நிலைபற்றி இந்திய ஜனாதிபதி

கெய்ரோ, மார்ச் 10

சகல மண்டல சார்பற்ற நாடுகளிலும் கெய்ரோ வியட்னும் பிரச்னைக்குத் தீர்வுகாண்பதில் நல்ல முயற்சி மேற்கொள்ளக்கூடிய நிலையிலிருக்கிறது. சகல சார்பினருடனும் கெய்ரோ நல்லுறவுடன் இருப்பதால் தாம் இவ்விதம் கூறுவதாக பாரத ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளதாகக் கெய்ரோவிலிருந்து வெளியாகும் 'அல் அஹ்ரம்' என்ற பத்திரிகை வெளியிட்டுள்ளது.

இப்பத்திரிகை ஆசிரியர் முகமது ஹஸன் ஹெய்கால் சமீபத்தில் டாக்டர் ராதாகிருஷ்ணனைச் சந்தித்தபோதே இத்தகவலை அவரிடமிருந்து பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இப்படியும் நடக்கிறது!

காங்கேசன்துறை, வியா

நாய் கடித்த, ஒருவருக்கு ஏற்பட்ட காயத்துக்கு உடன் சிகிச்சை செய்யமறுத்து, பின்னர் திடீர் மரண விசாரணை அதிகாரி தலையிட்டதை தொடர்ந்து உடன் சிகிச்சை செய்த சம்பவம் காங்கேசன்துறை ஆஸ்பத்திரியில் நடைபெற்றுள்ளது.

இன்று மத்தியானம் நாய் கடித்து, இரத்தம் வேகமாக ஓடிக்கொண்டிருந்த நிலையில் ஒரு பெண்மணி சிகிச்சை பெறுவதற்காக காங்கேசன்துறை ஆஸ்பத்திரிக்குச் சென்றபோது, அங்கு கடமையாற்றும் ஒரு ஊழியர் உடன் எதுவும்செய்யமுடியாதென்றும், மாலைவரும்படி சொன்னுரென்றும். அங்கு இருந்த திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. ஜி. வி. பாலசிங்கத்துக்கு செய்த புகாரைத் தொடர்ந்து அந்தப் பெண்மணிக்கு உடன் சிகிச்சை செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டதாம்.

## எதிரிகளுக்கு சிறை

வல்வெட்டித்துறை, புதன்

அல்வாய் வடக்கைச் சேர்ந்த ஐயன் இராசன், ஐயன் புலேந்திரன் ஆகிய இருவரும் அதே ஊரைச் சேர்ந்த சின்னத்தம்பி என்பலருக்கு அடித்து காயப்படுத்தியதாக தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்டிரேட் திரு. றூபேர்ட் சில்வா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணை முடிவில் நீதிபதி எதிரிகளைக் குற்றவாளியாகக்கண்டு தலா 4 மாதச் சிறைத்தண்டனை விதித்துள்ளார்.

## பாடசாலையின் பெயரை மாற்றக் கோரிக்கை

மாங்குளம், வியா.

காதலியார் சம்மளங்குள அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் பெற்ருேர் ஆசிரியர் சங்கக் கூட்டம் தலைமையாசிரியர் திரு. எம். கே. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற போது பாடசாலையின் பெயரை 'நாகமணி அரசினர் வித்தியாசாலை' எனப் பெயர் மாற்றம் செய்யவேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப் பட்டது.

மேற்படி பாடசாலைக்கு ஒரு ஆங்கில உதவி ஆசிரியர் நியமிக்கப்பட வேண்டுமெனவும் தனியான விளையாட்டு மைதானம் அமைக்கப்பட வேண்டுமெனவும் உதவி வித்தியாதிபதியைக் கோரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## சேவை நலம் பாராட்டு விழா

யாழ்ப்பாணம், வெள்ளி

பண்டத்தரிப்பு மகளிர் உயர்நிலைப் பள்ளித் தலைவி செல்வி ஈ. கே. மதியாபரணத்தின் சேவையைப் பாராட்டுமுகமாக 14-ந் திகதி திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு கல்லூரி அரங்கில் ஒரு பிரிவுபசார விழா நடைபெறும்.

முன்னுள் கிராமசபைத் தலைவி திருமதி பேஸி அத்தனுசியார் விழாவிற்குத் தலைமைவகிப்பார்.

அன்று பல பெரியோர்கள் சேவைநலம் பாராட்டுவார்கள்.

## பெண்களைத்தாக்கிய வழக்கில் எதிரிக்கு ஆறுமாத சிறை

மாவிட்டபுரம், வியா

''இவ்வழக்கில் உனது இரு மக்களையும் அவர்கள் பெண்களென்றும் பாராமல் பாபமென்றும் பாராமல் கத்தியால் வெட்டியிருக்கிருய். பெண்களைக் கத்தியால் வெட்டினுல் சிறைத் தண்டனையுடன், கசையடியும் வழங்கலாம். இவ்வழக்கில் உன்னை இந்தத் தடவை சிறைத் தண்டனையுடன் விட்டுவிடுகிறேன்'' என்று மல்லாகம் நீதிபதி திரு. ஜி. எவ். எச். அத்துருபாணு முன்னிலையில் இரு பெண்களைக் கத்தியால் வெட்டியதாகக் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் நீதிபதி எதிரிக்கு ஆறுமாத கடூழியச் சிறையும் ஐம்பது ரூபா அபராதமும் விதிக்கையில் மேற்கண்டவாறு கூறினுர்.

இவ்வழக்கில் அளவெட்டி வடக்கைச் சேர்ந்த வயிரமுத்து செல்லன் என்பவர் சென்ற வருடம் மேமாதம் பத்தொன்பதாம் தேதி அதே ஊரைச் சேர்ந்த திருமதி செல்லமுத்து தங்கமலர் என்பவரை புறக்கத்தியால் அடித்துப் படுகாயம் விளைவித்ததகவும், அதே நேரத்தில் செல்வி சின்னத்துரை மகேஸ்வரியைக் கத்தியால் வெட்டிக் காயம் விளைவித்ததாகவும் சுன்னுகம் பொலிஸாரால் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

சுன்னுகம் பொலிஸ்இன்ஸ்பெக்டர் திரு. பேர்ஸி வீரசூரியாவின் உதவியுடன் வழக்கறிஞர்திரு. ஜே. ஆர். செல்வரத்தினம் வழக்கை நடத்தினுர். எதிரிதரப்பில் வழக்கறிஞர் திரு. எஸ். ஸ்ரீதரன் ஆஜராஞர்.

டாக்டர் சுப்பிரமணியம், திருமதி செல்லமுத்து தங்கமலர், செல்வி மகேஸ்வரி உட்படப் பலர் சாட்சியமளித்தனர். நீதிபதி விசாரணையின்போது எதிரியைக் குற்றவாளியாகக் கண்டார். எதிரிதரப்பு வழக்கறிஞர் நீதிபதியிடம் எதிரிக்கு 5 பிள்ளைகளும், மனைவியும் இருப்பதாகவும், எதிரி சிறைக்குச் சென்ருல் அவர்களின் சீவனம் பாதிக்கப்படுமென்றும் எதிரிக்குக் கருணைகாட்டுமாறும் கூறினுர்.

நீதிபதி வழக்கறிஞரின் கோரிக்கையை நிராகரித்து முதலாவது குற்றச்சாட்டுக்கு நாலுமாதக் கடூழியச் சிறைத்தண்டனையும் ஐம்பதுரூபாஅபராதமும் விதித்தார். அபராதம் செலுத்தத் தவறினுல் மேலும் நாலுவாரக் கடூழியச்சிறை அனுபவிக்கும்படியும் இரண்டாவது குற்றச்சாட்டுக்கு இரண்டுமாதக் கடூழியச் சிறையும் விதித்துத் தண்டனையை வெவ்வேறு காலங்களில் அனுபவிக்கும்படியும் உத்தரவிட்டார்.

## தொடர்புகள் துண்டிப்பு

வியட்னும், மார்ச் 10

தென்வியட்னுமில் அமைக்கப்பட்டுள்ள காம்ப் ஒன்றை வியட்னும் கொரில்லாக்கள் இன்று தாக்கிச் சேதப்படுத்தியதாகத் தெரியவருகிறது.

'குறிப்பிட்ட 'காம்' பிலிருந்து தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க ராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

## மகோற்சவம் ஆரம்பம்

வல்வெட்டித்துறை, வியா.

வல்வெட்டித்துறை வைத்தியேஸ்வரர் வருடாந்த மகோற்சவம் இம் மாதம் 21-ந் திகதி ஆரம்பமாகி அடுத்தமாதம் 4,5-ந் திகதிகளில் தேர், தீர்த்தவைபவத்துடன் முடிவடைகிறது,

## தடை நீங்கியது

கொழும்பு, வியாழன்

ஜனவரி மாதம் 8-ம் திகதி தடைசெய்யப்பட்ட ''ஜனதின'' பத்திரிகை மீதான தடை உத்தரவு இன்றுஅகற்றப்பட்டது இப் பத்திரிகை லங்கா சமசமாஜ கட்சி ஆதரவுடைது. ''அத்த'' பத்திரிகை மீது தொடர்ந்து தடை இருக்கிறது.

## விவசாயக் கழகக் கூட்டம்

கோண்டாவில், வியா.

இணுவில் தேசிய விவசாயிகள் கழகத்தின் மாதாந்தப் பொதுக்கூட்டம் கழகத் தலைவர்திரு. இ. பொன்னம்பலம் தலைமையில் இணுவில் சைவமகாஜன வித்தியாசாலை மண்டபத்தில்நேற்று முன்தினம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் உபஉணவுப்பயிர்களை விவசாயிகள் அதிகமாகப் பயிரிடவேண்டுமெனவும் குறிப்பிட்டு கிழங்கு, தினை, வெங்காயம், குரக்கன் போன்றவைகளை அதிகமாக இம்முறைபொதுமக்கள்பயிரிடவேண்டும்எனவும் மாணவர்கள் இனி முக்கியமாக விவசாயத்தில் ஈடுபட்டுதமக்குவேண்டிய உணவுப் பொருட்களைத் தாமே உற்பத்தி செய்யவேண்டும் என்றும் திரு பொன்னம்பலம் பேசுகையில் குறிப்பிட்டார்.

கழகத்தின் ஆண்டுவிழா சித்திரைமாதம் கொண்டாடுவதென்றும் இணுவில் கிராமத்தில் ஓர் சைவ மகா வித்தியாலயத்தை ஸ்தாபிக்கவேண்டுமென்றும் இணுவில் கிராம மக்களுக்கு ஓர் விளையாட்டு மைதானத்தை ஏற்படுத்தவேண்டுமென்றும் தீர்மானம் நிறைவேற்றப் பட்டன.

## மேலும் 5 ஆசிரியர்கள் வேலை நீக்கம்

பம்பலப்பிட்டி, வியா.

பொதுத்தேர்தல் காலத்தில் அரசியலில் பங்குபற்றியதற்காக மேலும், ஐந்து ஆசிரியர்கள் வேலைநீக்கம் செய்யப்படுவார்கள் எனத் தெரியவருகிறது.

கடந்த பொதுத் தேர்தலில் பங்குபற்றியதற்காக ஏழு ஆசிரியர்கள் ஏற்கனவே வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கல்வி அமைச்சினுல் சிபார்சு செய்யப்பட்ட இவ் வேலைநீக்கம் பொதுசேவைக் கமிஷனினுலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது,

## நியமனப் பத்திரம் தாக்கல்

வல்வெட்டித்துறை, வியா.

உடுப்பிட்டி கிராம சபையின் 24 வட்டாரங்களின் அபேட்சகர் நியமனப்பத்திரத் தாக்கல் இம் மாதம் 15-ந் திகதி செவ்வாய்க்கிழமை வரை ஏற்றுக் கொள்ளப்படுமென மேலதிகாரிகளால் அறிவிக்கப்பட்டுள்ளது.

## திருவள்ளுவர் குருபூசை

செட்டிகுளம், வியாழன்

செட்டிகுளம் கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் திரு. ம. கு. மரியதாஸன் தலைமையில் முகத்தான் குளம் திருவள்ளுவர் கழகத்தினரால் மிகவும் சிறப்பாக திருவள்ளுவர் பூசை கொண்டாடப்பட்டது.

இப்பொழுது திரையிடப்படுகிறது
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ணு (திருகோணமலை) மொடேர்ன் (பதுளை)
மொடேர்ன் (பண்டாரவளை) வஜிதா (அட்டன்) வெலிங்டன் (யாழ்ப்பாணம)



நாகேஷ் - கே. ஆர். விஜயா
முத்துராமன், எஸ். ராமராவ், காஞ்சனு
நடித்த
சர்வர் சுந்தரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வதிரி டயமன்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம், வியா.

யாழ். உதைபந்தாட்டச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் யாழ்ப்பாணம் கிருஸ் கொப்பர்ஸ் கோஷ்டியும், வதிரி டயமன்ஸ் கோஷ்டியும் மிகவும் ரசிப்பாக மோதிக் கொண்டன. இடைவேளைக்கு முன் நடைபெற்ற போட்டியில் முதலில் டயமன்ஸ் கோஷ்டியே கோல்போட்டது. இவர்களுக்குக் கிடைத்த ஒரு பனல்டியைப் பயன்படுத்தியே இக்கோலைப் பெற்றனர். போட்டி பார்ப்பதற்கு விறுவிறுப்பாகக் காணப்பட்டது

இடைவேளையின் போது கிருஸ்கொப்பர்ஸ் ஒரு கோலும் போடாதவகையில் டயமன்ஸ் ஒரு கோல் போட்டிருந்தது. இடைவேளைக்குப்பின் நடந்த போட்டியில் டயமன்ஸ் 3 கோல்களும், கிருஸ்கொப்பர்ஸ் 2 கோல்களும் போட்டன. இடைவேளைக்குப்பின் இரு கோஷ்டியுமே ஒன்றை ஒன்று விட்டுக்கொடுக்காமல் போட்டியிட்டது குறிப்பிடத்தக்கது. கிருஸ்கொப்பர்ஸ் கோஷ்டியினருக்கும் ஒரு பனல்டி கிடைத்தது. ஆனால் அதை அடித்த வீரர் அதைத் தவறவிட்டதுகுறிப்பிடத்தக்கது.

இப்போட்டி முடிவில் வதிரி டயமன்ஸ் கோஷ்டி யாழ். கிருஸ்கொப்பர்ஸ் கோஷ்டியை 4—2 கோல்களால் வெற்றியீட்டியது. பண்ணை மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு, ஜே. நவரத்தினம் மத்தியஸ்தம் வகித்தார்.



லக்ஷபான
பாட்டரிகள்
இறக்குமதியாகும் எந்த பாட்டரியையும் விட குறைந்த செலவில் கூடிய சேவை தருகின்றன.
ஏனெனில்:
எலி. பண்ட் லீட் கார்ப்பரேஷன் லிமிட்டெட்





## சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவர் கோஷ்டி வெற்றி

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியின் ஆசிரியர் கோஷ்டிக்கும் மாணவர் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற ரசிப்பான ஓர் கிரிக்கெட் போட்டியில் மாணவர் கோஷ்டி ஆசிரியர் கோஷ்டியை மிகவும் சிரமப்பட்டு 47 ஓட்டங்களால் வெற்றியீட்டியது. எதிர்பாராத இவ் வெற்றிக்கு காரணகர்த்தாவாக இருந்த சின்னப்பா 29 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 7 விக்கட்டுகளை வெற்றிகரமாக வீழ்த்தினர்.

ஒரு இனிங்சுக்கான இப்போட்டியில் மாணவர் கோஷ்டியே முதலில் துடுப்பெடுத்தாடியது. இக்கோஷ்டி சகல விக்கட்டுகளையும் இழந்து மொத்தம் 147 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ரி, ஜெயநானந்தராசா 8 ஓட்டங்களும், ஏ, விஜயகுமார் 6 ஓட்டங்களும், பி. கனகதுரை 65 ஓட்டங்களும், சதாசிவம் 16 ஓட்டங்களும், சின்னபாலா 12 ஓட்டங்களும், ராஜநாதன் 9 ஓட்டங்களும், புவனச்சந்திரன் 6 ஓட்டங்களும், கணேஷ் 6 ஓட்டங்களும் முறையே பெற்றனர். இச் சந்தர்ப்பத்தில் ஆசிரியர் கோஷ்டியின் பந்தெறி வீரர்களான தவராசலிங்கம் 36 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 4 விக்கட்டுகளும், தனபால் 29 ஓட்டங்கள் நஷ்டத்திக்கு 2 விக்கட்டுகளையும், பஞ்சலிங்கம் 10 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 2 விக்கட்டுகளைரிம், நித்தியசீலன் 6 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு ஒரு விக்கட்டையும், குணசீலன் 29 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு ஒரு விக்கட்டையும் முறையேவீழ்த்தினர், இதையடுத்து ஆசிரியர் கோஷ்டி தனது துடுப்படி ஆட்டத்தை ஆரம்பித்தது. இக்கோஷ்டியினர் தங்கள் சகல விக்கட்டுகளையும் இழந்து மொத்தம் 94 ஓட்டங்களே பெற்றனர், இதில் ரி. துரைரத்தினம் 33 ஓட்டங்களும், எஸ். தனபாலன் 14 ஓட்டங்களும், நித்தியசீலன் 11 ஓட்டங்களும், தவருஜலிங்கம் 9 ஓட்டங்களும், புவனநாதன் 6 ஓட்டங்களும், சிவநானந்தன் 3 ஓட்டங்களும், குணசீலன் ஒரு ஓட்டமும் மற்றும் கருணமூர்த்தி, பஞ்சலிங்கம், தேவதாசன் ஆகிய வீரர்கள் ஒரு ஓட்டமும் எடுக்காமலும் விக்கட்டை இழந்தனர். அமரசிங்கம் தனது விக்கட்டை இழக்காமல் 2 ஓட்டங்களைப் பெற்ருர்.

இச்சந்தர்ப்பத்தில் மாணவர் கோஷ்டியின் பந்தெறி வீரர்களான சின்னபாலா 26 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 7 விக்கட்டுகளும் இராசநாதன் 10 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு ஒரு விக்கட்டும், ரி. கணேஷ் 7 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு ஒரு விக்கட்டும், இராசதுரை 13 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு ஒரு விக்கட்டும் முறையே வீழ்த்தினர்.

இப் போட்டி யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

கிரிக்கெட்

## யாழ். இந்துக்கல்லூரி வெற்றி

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும், குருநாகல் சென். அனிஸ் கல்லூரிக்கும் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் யாழ். இந்து கடுமையான போட்டியின் பின்னர் 86 ஓட்டங்களால் வெற்றியீட்டியது. இவ் வெற்றிக்கு மூலகாரணகர்த்தாவாக இருந்த கே. சண்முகலிங்கம் 26 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 7 விக்கட்டுகளை வெற்றிகரமாக வீழ்த்தினர். முதலாவது இனிங்சுக்கான துடுப்படி ஆட்டத்தை யாழ். இந்துக்கல்லூரியே ஆரம்பித்தது. இக்கோஷ்டியினர் சகல விக்கட்டுகளையும் இழந்து மொத்தம் 118 ஓட்டங்களைப் பெற்றனர். இதில் பி. தர்மரெட்ணம் 43 ஓட்டங்களையும். கே. சத்தியநாதன் 27 ஓட்டங்களையும், வி. சின்னராசா 33 ஓட்டங்களையும், கே. ஜெயபாலசிங்கம் தனது விக்கட்டை இழக்காமல் 7 ஓட்டங்களையும் முறையே பெற்றனர்.

இச் சந்தர்ப்பத்தில் குருநாகல சென். அனிஸ் பந்தெறி வீரர்களான பீ. டீ. சில்வா 19 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு ஒரு விக்கட்டையும், எல். டீமெல் 27 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 4 விக்கட்டுகளையும், ஈ. சில்வா 15 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 2 விக்கட்டுகளையும், என். பத்னுயக்கி 9ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 3 விக்கட்டுகளையும்முறையேவீழ்த்தினர். இதையடுத்து சென் அனிஸ் கல்லூரி தனது முதலாவது இனிங்சுக்கான துடுப்படி ஆட்டத்தை ஆரம்பித்தது. இக் கோஷ்டியினர் சகல விக்கட்டுகளையும் இழந்து மொத்தம் 89 ஓட்டங்களே பெற்றனர். இதில் ஈ. சில்வா 19 ஓட்டங்களும், எஸ். சமரநாயக்கா 8 ஓட்டங்களும், பி. ஹரிச்சந்திரன் 8 ஓட்டங்களும், டி. இறமுடுலா 22 ஓட்டங்களும் எம். சினிவறெட்னு 6 ஓட்டங்களும், என். காமினி 7 ஓட்டங்களும் முறையே பெற்றனர்.

இச் சந்தர்ப்பத்தில் யாழ். இந்துக்கல்லூரியின் பந்தெறிவீரர்களான கே. சண்முகலிங்கம் 23 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு ஒரு விக்கட்டையும், வி. அருளானந்தன் 24 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 6 விக்கட்டுகளையும், எஸ். சிவானந்தன் 25 ஓட்டங்கள் நஷ்டத்தித்கு 3 விக்கட்டுகளையும் முறையே வீழ்த்தினுர்கள்.

இதையடுத்து யாழ். இந்துக்கல்லூரி தனது இரண்டாவது இனிங்சுக்கான துடுப்படிஆட்டத்தை ஆரம்பித்தது. இக் கோஷ்டியினர் சகல விக்கட்டுகளையும் இழந்து மொத்தம் 118 ஓட்டங்களைப் பெற்றனர். இதில் பி. தர்மரெட்ணம் 25 ஓட்டங்களையும், கே. சத்தியநாதன் 8 ஓட்டங்களையும், வி. அருளானந்தன் 9 ஓட்டங்களையும், வி. சின்னராசா 14 ஓட்டங்களையும், எஸ். சிவானந்தன் 10 ஓட்டங்களையும், கே. சண்முகலிங்கம் 8 ஓட்டங்களையும், கே. ஜெயபாலசிங்கம் 14 ஓட்டங்களையும், [illegible] இழக்காமல் 17 ஓட்டங்களையும் முறையே பெற்றனர்.

இச்சந்தர்ப்பத்தில் சென். அனிஸ்கல்லூரியின் பந்தெறி வீரர்களான எல். டீமெல் 45 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 6 விக்கட்டுகளையும், என். றட்னுயக்கி 23 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு ஒரு விக்கட்டையும், ஈ. சில்வா 21 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 3 விக்கட்டுகளையும் முறையே வீழ்த்தினர். இதையடுத்து சென். அனிஸ் கல்லூரி தனது 2-வது இனிங்சுக்கான துடுப்படி ஆட்டத்தை ஆரம்பித்தது. இக்கோஷ்டியினர் தமதுசகல விக்கட்டுகளையும் இழந்து மொத்தம் 61 ஓட்டங்களைப் பெற்றனர். இதில் ஈ. சில்வா 12 ஓட்டங்களும், பி. ஹரிசன் 8 ஓட்டங்களையும். பீ. டி. சில்வா 6 ஓட்டங்களையும், டி இறமுடுலா 16 ஓட்டங்களும் எம். கமனி 11 ஓட்டங்களையும் முறையே பெற்றனர். இச் சந்தர்ப்பத்தில் யாழ் இந்துவின் பந்தெறி வீரர்களான கே. சண்முகலிங்கம் 26 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 7 விக்கடடுகளையும், வி. அருளானந்தன் 19 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு ஒரு விக்கட்டையும், எஸ். சிவானந்தன் 15 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 2 விக்கட்டுகளையும் முறையே வீழ்த்தினர். இப்போட்டி குருநாகல் சென். அனிஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

## வரி விளம்பரம்

### தேவை

நன்கு அனுபவமுள்ள நெசவாளர்கள் (பெண்) தேவை. நேரில் விண்ணப்பிக்கவும். லியோ டெக்ஸ் வீவிங் இன்டஸ்றீஸ், 45, ஜும்மா மொஸ்க் ஒழுங்கை, யாழ்ப்பாணம், 2147

சாறி பெயின்ரிங், சாறி டசல்ஸ் இவைகளில் அனுபவம் வாய்ந்த நான்கு பெண்கள் தேவை. உடனே றல்மாஸ் சாறி வேர்க்ஸ், மேல்மாடி, 18, பெரியகடை, யாழ்ப்பாணத்துக்கு விண்ணப்பிக்கவும். 2145

ஆங்கிலத்திலும் தமிழிலும் அச்சுப்பிழை திருத்துவதில் அனுபவமுள்ளஒருவர் உடனே தேவை. சமீபத்தில் கொடுக்கப்பட்ட நற்சாட்சிப்பத்திரங்களுடன் நேரில் விண்ணப்பிக்கவும். கலைவாணி அச்சகம், 10, பறங்கித் தெரு, யாழ்ப்பாணம். 2153

உழவு இயந்திரச் சாரதி (Tractor Driver) நல்ல தேர்ச்சிபெற்ற அரசாங்க உத்தரவு பெற்றவர்கள் நற்சாட்சிப் பத்திரங்களுடன் முன்னனுபவங்களையும் காட்டி, கீழ்க்காணும் விலாசத்திற்குவிண்ணப்பிக்கவும். கடமையாற்றுமிடம் ஓமந்தை, மூன்று முறிப்பு ரோட்டிலிருக்கும் கமங்கள். சுயதேச அபிவிருத்திச் சங்கம், 91/A, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 2142

### தையல்

தையல் மெசின் பழுது பார்க்க "S. S. லிங்கம்ஸ், 24/2, கனகரெத்தினம் வீதி, யாழ்ப்பாணம்" என்ற விலாசத்துக்கு உங்கள் விலாசத்தை விபரமாக எழுதி ஒரு போஸ்ட்காட் மூலம் அறியத்தந்தால் நேரில் வந்து பழுது அகற்றிக் கொடுக்கப்படும். 2143

### வாடகைக்கு

கே. கே. எஸ். வீதியில் 504-ம் நம்பர் (தட்டா தெரு) வீடு, (எல்லா வசதிகளுடன்) வாடகைக்கு இருக்கிறது. விபரங்கட்கு: எஸ். கே. சேனுதிராசா, சேனுதிராசா நகைமாளிகை, கொக்குவில் கிழக்கு. 2152

### விற்பனைக்கு

நெசவாளர்களுக்கோர் அரிய சந்தர்ப்பம். கைத்தறி சேலைகளுக்கு பூப்போடும் பற்றேன் (Pattern) புத்தகங்களை எம்மிடமிருந்து வி. பி. பி மூலம் பெற்றுக்கொள்ளலாம். எஸ். சவிரிமுத்து, 73, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். 2149

ஒரு கிழமை முதல் ஆறு கிழமைக் கோழிக்குஞ்சுகளும் அடை முட்டைகளும் விற்பனைக்கு உண்டு. 64, பிரவுண் ரோட்டு, யாழ்ப்பாணம். 2137

நல்ல நிலையில் உள்ள CL 655 லோட் மாஸ்ரர்லொறி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு வி. சிங்காரம், 7/1, அன்னசத்திரம் ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம். 2129

பூநகரி, செட்டிய குறிச்சியில் ரோட்டோரமாக 50 பரப்பு திறமான நெல்வயல் நல்லதண்ணீர்க்கிணறும்வளவுடன் விற்பனைக்குண்டு. 31-3-66 வரை தொடர்பு கொள்ளவும்.
க. கனகசபை, 21/3, சுவாமியார் வீதி, கொழும்புத்துறை. 2131

### காணவில்லை

தாலியும் ஓர் தடையும், புங்குடுதீவு பஸ்ஸில் போகையில் தவறிவிட்டது. கண்டெடுத்துக் கொடுப்பவருக்குத் தகுந்த சன்மானம் வழங்கப்படும். இவற்றை 'ஈழநாடு' காரியாலயத்தில் சமர்ப்பிக்கவும். 2146

### கல்வி

பிரவேசப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. ஜி. சி. ஈ. சாதாரணம் கலை/விஞ்ஞானம்/வர்த்தகம், ஜி. சி. ஈ. உயர்தரம் கலை/விஞ்ஞானம், ஜி. சி. ஈ. விஞ்ஞானம் முதல் வருடம் வகுப்புக்கள், விடுதி வசதி உண்டு. ஐக்கிய கலாசாலை, நெல்லியடி, கரவெட்டி, 107, பருத்தித்துறைரோட், நல்லூர், யாழ்ப்பாணம். 2118

### நன்றி நவிலல்

அப்பாத்துரை:- காலஞ்சென்ற திரு. சங்கரப்பிள்ளை அப்பாத்துரை அவர்களின் மரணச் சடங்கில் பங்குபற்றியவர்களுக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் அவரது குடும்பத்தினர் தமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றனர். 'சரோஜினி வில்லா' ஆனைக்கோட்டை. 2150

ஃ ஃ ஃ

திருநெல்வேலி கிழக்கில் கோவில் கொண்ட அர்ச். பிரான்சீஸ்கு சவேரியார் 6 வருஷங்களாய் பார்வையற்றிருந்த எனக்கு அவரை மன்றுடிக் கேட்டபடி இப்போ பூசைகாணவும் செபங்கள் வாசிக்கவும் சுத்தவாளரின் பெயரால் நவநாட் செய்து என் கண்கள் வெளிச்சமடையச் செய்ததையிட்டு நன்றியறிந்த ஸ்தோத்திரங்கூறி அவரின் மகிமையை உலகத்தார்க்கு அறியத்தருகிறேன். அர்ச். சவேரியாரின் நாமம் என்றும் புகழப்படுவதாக. இங்ஙனம் அவர் ஊழியக்காரி அ. மதலேனு 2151

### பிரிட்டன் அறிவிப்பு

லண்டன், மார்ச் 9

வியட்னுமுக்கு பிரிட்டிஷ் துருப்புகள் அனுப்பப்படமாட்டா என்று வெளிநாட்டுக் காரியதரிசி திரு. மைக்கல் ஸ்ருவார்ட் காமன்ஸ் சபையில் தொழில் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின்கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் கூறுனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பஸ் ஊழியருக்கு பிரதேச வெற்றிக்கிண்ணம்

யாழ்ப்பாணம், வெள்ளி

சுகததாசா ஸ்டேடியத்தில் நடைபெற்ற அகில இலங்கை இ. போ. ச. ஊழியர்கள் விளையாட்டுப்போட்டில் வடபிரதேச இ. போ. ச. ஊழியர்களும் பங்குபற்றிப் பல நிகழ்ச்சிகளில் முதலிடம்பெற்றுள்ளனர்.

பஸ் சாரதிகள், பஸ் கண்டக்டர்கள், பஸ் திருத்தும் ஊழியர்கள் ஆகியோருக்கான 100 யார் ஓட்டப் போட்டியில் யாழ்ப்பாணப் பகுதி முதலிடம்பெற்றுள்ளது.

மிகவும் ரசிப்பான கயிறு இழுத்தல் போட்டியிலும் யாழ்ப்பாணப்பகுதி முதலிடம்பெற்றுள்ளது.

பல நிகழ்ச்சிகளில் முதலிடம் பெற்றதன்காரணமாகப் பிரதேச வெற்றிக்கிண்ணமும், யாழ். இ. போ. ச. பகுதிக்கு வழங்கப்பட்டுள்ளது.

## எதிரி விடுதலை சாட்சிக்கு எச்சரிக்கை

மாவிட்டபுரம், வியா

அராலி வடக்கைச் சேர்ந்தவரும், இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தருமான வேலுப்பிள்ளை நவரத்தினம் என்பவரைச் சென்றவருடம் ஜூன் மாதம் 14ந் தேதி சங்கானைச் சந்தையில் வைத்துத் தாக்கி, அவரின் அறுபது ரூபாய் பணத்தைப் பறித்ததாகச் சங்கானை கிழக்கைச் சேர்ந்த சுப்பிரமணியம் சண்முகராஜா என்பவர்மீது குற்றஞ்சாட்டி, சங்கானைப் பொலிஸாரால் தொடரப்பட்ட வழக்கில் மல்லாகம் நீதிபதி திரு. ஜி. எவ். எச். அத்துறுபாறு வழக்குவிசாரணையின்பின் எதிரியை விடுதலைசெய்தார். எதிரிதரப்பில் வழக்கறிஞர் திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜரானர்.

இவ்வழக்கில் பொய்ச்சாட்சியம் கூறியதற்காகச் சென்றதவணை 250 ரூபாய் பிணையில் விடப்பட்டிருந்த சாட்சியான செல்லப்பா சதாசிவம் என்பவர் மீதான விசாரணை எடுத்துக்கொள்ளப்பட்டபோது சாட்சி சார்பில் ஆஜரான அட்வக்கேட் திரு. ஏ. அமிர்தலிங்கம் நீதிபதியிடம் சாட்சியை எதிரி பயமுறுத்தியதால்தான் சாட்சி பொய்ச்சாட்சியம் கூறியதாகவும், அவர் இதற்கு முன்னர் கோர்ட்டிற்கு வராதபடியால் நீதிமன்றத்தில் எப்படிச் சாட்சியமளிப்பதெனத் தெரியாது இப்பிழையை விட்டதாகவும் அவர் இதற்கு முன்னர் கோர்ட்டில் குற்றப்படாததால் அவரை மன்னிக்கும்படியும்கூறினர். சாட்சி குற்றத்தை ஒப்புக்கொள்ளவே நீதிபதி சாட்சியை எச்சரித்து விடுதலை செய்தார். சாட்சியின் சார்பில் வழக்கறிஞர் திரு. எஸ். நடராசாவின் அனுசரணையுடன் திரு. ஏ. அமிர்தலிங்கம் ஆஜரானர்.

## ஒருவர்மட்டும் சித்தி!

மன்னர், வியா.

மன்னர் மாவட்டதிலிருந்து கடந்த அக்டோபர் மாதம் நடைபெற்ற சிங்களத் தேர்ச்சிப் பரீட்சை எழுதியவர்களில் ஒருவர் மட்டுமே சித்தியடைந்துள்ளார். இப்பரீட்சைக்கு 86 அரசாங்க ஊழியர்கள் தோற்றினர்கள்.

## இன்று

யாழ்ப்பாணம், வெள்ளி

இன்று மாலை 6 மணிமுதல் இரவு 9 மணிவரை அகில இலங்கைப் பொதுஜன சேவைச் சங்கச் சமயப்பிரசாரசபையினரால் பின்வரும் தேவஸ்தானங்களில் பிரசங்கங்கள் நிறைவேறும்.

நாயன்மார்க்கட்டு ஸ்ரீ இராஜராஜேஸ்வரிஅம்பாள் ஆலயம்-மாலை 8 மணிமுதல் கதாப்பிரசங்கியார் திரு. த. சுப்பிரமணியம் பெரிய புராணத் தொடர்ச்சியும், நல்லூர் கிழக்கு ஸ்ரீ மூத்த விநாயகர் ஆலயத்தில் மாலை 7 மணிமுதல் பண்டிதர் இரா. சிவசுப்பிரமணியம்-பெரியபுராணம் என்னும் பொருள்பற்றிய பிரசங்கமும், நீராவியடி கயிற்சுவாமி தேவஸ்தானத்தில் திரு. த. சுப்பிரமணியம்-மாலை 7 மணிமுதல் இயற்பகை நாயனர் என்னும் பொருள்பற்றிய பிரசங்கமும் நிகழ்த்துவார்கள்.

ஃ ஃ ஃ

வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்தில் மாலை 5-30 மணி முதல் சங்கீத வித்துவான் சித்திரவேலு கோஷ்டியினரின் கூட்டுப் பிரார்த்தனை, 6 மணிமுதல் ஸ்ரீமத் சீ. எஸ். எஸ். மணி பாகவதரால் "மகா பாரதவிரிவுரை" 7 மணியளவில் சுக்கிர வார உற்சவம் ஆகியன நிறைவேறும்.

## உலக தமிழா...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யிலுள்ள இக்கழகத்தின் இணைப்புக்காரியதரிசியான பேராசிரியர் வண. தனிநாயக அடிகளார் நாளை மலேஷியா திரும்பவிருக்கின்றார்.

## வங்காளத்தில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கடைசியாகக் கிடைத்த செய்தியின்படி சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட இங்கு இப்போது ராணுவம் அழைக்கப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

## பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் "கிறீன் பீல்" விளையாட்டுக் கழகத்தாரின் வருடாந்தப் பொதுக் கூட்டம் யாழ். மாநகர சபை அங்கத்தவர் திரு. பி. எவ். சேவியர் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் பல தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

புதுவருட உத்தியோகஸ்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:

போஷகர்: வண. கட்டளைக் குருவானவர் பொன்னையா, தலைவர்: திரு. ரி. குமார், உப. தலைவர்கள்: திரு, ஜி. அருளானந்தம், தியு. ரி. குளோட்ரட்ணம், தனதிகாரி; திரு. எஸ். அந்தோணிப்பிள்ளை, செயலாளர்: திரு. ஆர். பி. குணரட்ணம், உப. செயலாளர்: திரு. எஸ். அன்ரனி, கணக்குப் பரிசோதகர்: எஸ். ஈ. கிறிஸ்ரியன், விளையாட்டுக் காரியதரிசி: திரு. பி. என். சாள்ஸ், உப. விளையாட்டுக் காரியதரிசி: திரு. எம். ஏ. அலோசியஸ்.

திருவாளர்கள்: எஸ். துரைசிங்கம், ஏ. அமலதாஸ், எம். சிங்கராயர், ஏ அன்ரன், எம். செல்லத்தம்பி ஆகியோர் நிர்வாக அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## ஊழியர்கள் சம்பளத்தில் மாற்றம்

பப்பலப்பிட்டி, வியா.

ஏப்ரல்மாதம் தொடக்கம் இ. போ. ச. ஊழியர்களுக்குப் புதிய திட்டப்படி சம்பளம் வழங்கப்படுமெனத் தெரியவருகிறது.

இத்திட்டத்தின் பிரகாரம் பஸ் சாரதிகள், கண்டக்டர்கள் மற்றும் சில்லறை ஊழியர்கள் ஆகியோர் உயர்ந்த சம்பளம் பெறுவர். உயர்ந்த பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களுக்குச் சம்பளஉயர்ச்சி வழங்கப்படமாட்டாது.

தேசிய சேவை அமைச்சர் திரு. வி. ஏ. சுகததாசாவிற்கு இ. போ. ச. ஊழியர்களின் சங்கங்கள் விடுத்த கோரிக்கைகளுக்கிணங்கவே இச்சம்பள மாற்றத்தை மந்திரி செயற்படுத்தத்திட்டமிட்டுள்ளார்.

# 52 சைக்கிள் திருடியவர் பொலிஸாரிடம் சிக்கினர்!

மட்டக்களப்பு, வியா

மட்டக்களப்பு பொலிஸ் கோஷ்டியினரின் தீவிர முயற்சியினல் பலநாள் சைக்கிள் திருட்டுப்பேர்வழி ஒருவர் பிடிபட்டுள்ளார். காத்தான்குடியைச் சேர்ந்த ஒருவரின் சைக்கிள் களவு போனதையொட்டி சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்ட கே. எம். முஸ்தபா என்பவர் பொலிஸாரின் தீவிர விசாரணையின் பின்பு தானே திருடியதாக ஒப்புக்கொண்டதாகத் தெரியவருகிறது.

இந்தச் சைக்கிள் திருட்டின் மூலம் இவரது பழைய சைக்கிள் திருட்டு முழுவதும் அம்பலத்துக்கு வந்தன வென்றும் திரு. சண்டேஸ் தலைமையில்சென்றபொலிஸ் கோஷ்டியினர் முஸ்தபா திருடியதாகக் கருதப்படும் 16 சைக்கிள்களைக் காத்தான்குடி, ஆரையம்பதி, மண்முனை, களுவாஞ்சிக்குடி, ஏருவூர், கல்முனை போன்ற இடங்களிலிருந்து கைப்பற்றினர் என்றும் கூறப்படுகிறது.

இதுவரை காலமாக முஸ்தபா என்பவர் 52 சைக்கிள்களைத் திருடியிருப்பதாகவும் அறியப்படுகிறது.

## கூப்பன்கள் யாருடையது?

யாழ்ப்பாணம், வெள்ளி

சுன்னகம் சந்தையில் ஒரு மூக்கு கண்ணுடியும் எட்டுக் கூப்பன்களும் திரு. எஸ். அருமைநாயகம் என்பவரினல் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த அத்தாட்சி காட்டி பெற்றுக்கொள்ளலாம்.

## கட்சி ரீதியில் போட்டியிட முடிவு

உடுப்பிட்டி, வியாழன்

உடுப்பிட்டி கிராமசபைத் தேர்தலுக்கான அபேட்சகர்கள் விண்ணப்பப்பத்திரங்கள் இம்மாதம் 15-ம் திகதி தாக்கல் செய்யப்படவிருக்கின்றன. தமிழரசுக்கட்சி ஆதரவாளர் பலர் கட்சிரீதியாக வேட்பாளர்களை நிறுத்த வேண்டும் என உடுப்பிட்டித் தமிழரசுக்கிளைத்தலைவர் திரு. க. ஜெயக்கொடியையும் பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினத்தையும் பேட்டி கண்டிருப்பதாகவும் பலர் தங்களைக் கட்சிவேட்பாளராக நிறுத்துமாறு கேட்டிருப்பதாகவும் தெரிகிறது.

கொள்கையளவில் கட்சி ரீதியில் போட்டியிட வேண்டும் என்று வடமராட்சித் தமிழரசுக்கட்சி இணைப்புச்சபை தீர்மானித்திருப்பதாகவும் கூடியவிரைவில்இணைப்புச்சபை கூடி இது பற்றித் தீர்மானிக்கும் என்றும் இணைப்புச்சபைத் தலைவர் அட்வகேட் திரு. க. ஜெயக்கொடி கூறினர்.

ஜாகாத்தாவில்

# சீன தூதரகத்தையும் மாணவர் சேதப்படுத்தினர்

## பல முக்கிய பத்திரங்கள் தீக்கிரை

ஜாகர்த்தா, மார்ச் 10

இந்தோனேஷியத் தலைநகரான ஜாகர்த்தாவில் உள்ள சீனத் தூதரகத்தினுள் இன்று ஆர்ப்பாட்டம் செய்யும் மாணவர்கள்பெருமளவில் நுழைந்து கட்டடத்தைச் சேதப்படுத்தியதுடன் முக்கிய தஸ்தாவேஜுகளுக்கும் தீவைத்தனர்.

மாணவர் ஆர்ப்பாட்டம் பலாத்காரச் செயல்கள் பற்றி என்ன நடவடிக்கை எடுப்பதென்று டாக்டர் சுகர்ணே தமது உயர்தர ஆலோசகர்களுடன் ஆலோசனை நடத்தினர்.

ஆர்ப்பாட்டக்காரர்களால் சேதப்படுத்தப்பட்ட காரியாலயங்களையும் டாக்டர் சுகர்ணே சென்று பார்வையிட்டார்.

வெளிவிவகார அமைச்சின் காரியாலயத்தில் நேற்றுப் புகுந்த மாணவர்கள் வெளிநாடுகளுடன் இந்தோனேஷியா செய்துகொண்ட ஒம்பந்தங்களுட்பட பல முக்கிய பத்திரங்களையும் தீக்கிரையாக்கிவிட்டனர்.

# மந்திரிகளை....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மிட்டிடுப்பதாக அறியக் கூடியதாக இருக்கிறதென்றும். அதன் உதவியைக் கூடப் பெறுமல்விட யோசனை இருக்கிறதாவென்றும் கேட்டதைத் தொடர்ந்து அமைதியாக நடைபெற்ற சபை நிகழ்ச்சிகளுக்கு சூடு பிடிக்கத் தொடங்கியது. இதற்கு பதிலளிக்கையில் தான் அந்தக் கேள்வியின் அந்தரங்க நோக்கம் விசித்திரமான ஒன்ருக இருக்கலாம் என்று கூறிய ஜே. ஆர். மேற்படி பதிலடியைக் கொடுத்தார்.

### பிலிப் ஏன் போகவில்லை?

திரு. வீரசேகரா மேலும் பேசுகையில் கிழக்கு ஜெர்மனியில் நடைபெறும் வர்த்தகக் கண்காட்சிக்கு கைத்தொழில் மந்திரி திரு பிலிப் குணவர்த்தன ஏன் போகவில்லையெனவும், அதற்கான காரணத்தை கூறவேண்டுமெனவும் கேட்டார்.

### பிலிப் பதில்

இக் கேள்விக்கு உடனடியாக பதளிக்கும் நோக்கத்துடன் திரு. பிலிப் குணவர்த்தன, 15-ம் திகதி கண்காட்சி முடிவடைகிறதெனவும், 14-ம் திகதி தாம் இலங்கையிலிருந்து புறப்படுவதனல் அதில் கலந்து கொள்ள முடியாதெனவும் கூறினர்.

நிலைமை இப்படி இருக்கையில் ஒரு நோக்கத்தை கருத்தில் கொண்டு இக் கேள்வி கேட்கப்பட்டிருப்பதாகவும் பதிலடி கொடுத்தார்.

கிழக்கு ஐரோப்பிய நாடுகளான ரஷ்யா, போலந்து, செக்கோஸ்லாவாக்கியா, ருமேனியா, யூகோஸ்லேவியா ஆகியவைகளுக்கும் மேற்குநாடுகளான பிரான்ஸ், ஐரோப்பா ஆகிய நாடுகளுக்கும் கன்டினேவியன் நாடுகளான நோர்வே, சுவீடன், பெல்ஜியம் போன்ற நாடுகளுக்கும்தாம் விஜயம் செய்யவிருப்பதாகவும் திரு. குணவர்த்தன கூறி, நாட்டின் நிதிநிலைமையைச் சீர்படுத்த எந்தநாட்டிலிருந்தாவது நிதிஉதவி பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் திரு. பிலிப் கொன்னர்.

அரசாங்கம் நடுநிலைமைக் கொள்கையை மேற்கொண்டிருப்பதாகவும் திரு. குணவர்த்தன கூறினர்.

### என். எம். — ஜே. ஆர். 'புதிய உறவு'

இன்று சபை ஆரம்பத்தின்போது திரு. ஜே. ஆர். ஜயவர்தனவுக்சம், டாக்டர் என்.எம். பெரேராவுக்குமிடையில் புதிய உறவு ஒன்று காணப்பட்டது. திரு. லெஸ்லி குணவர்த்தன சமீபத்தில் கையெழுத்தான அமெரிக்க ஒப்பந்தத்தை சபையில் சமர்ப்பிப்பதாக ராஜாங்கமந்திரி உறுதியளித்தபோதிலும் அது இன்னமும் சமர்ப்பிக்கப்படவில்லையென்று கூறியபோது, டாக்டர் பெரேரா குறுக்கிட்டு ராஜாங்க மந்திரியின் தலையில் ஏராளமான வேலைகள் சுமத்தப்பட்டிருப்பதாகவும் அவருக்கு எவராவது உவவி செய்கிருர்களில்லையென்றும் சொன்னர்.

### சபாஷ் ஜே ஆர்!

இதற்கு உடனடியாக சிரித்துக்கொண்டு பதிலளித்த திரு. ஜே. ஆர். 'நீங்கள் எதற்காக எனக்கு உதவி செய்ய வரக்கூடாது?' என்று கேட்டார்.

இக்கேள்வி முடிவதற்கு முன்னமேயே சபையில் சிரிப்பு எழுந்தது.

### மந்திரி எங்கே?

சபை ஒத்திவைக்கும் போது, திரு. பேர்ஸி விக்கிரமசிங்ஹா பேசும் போது, 'நெவிக்கெட்', 'பிரிஸ்டல்' ஆகிய சிகரெட்டுகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதாகவும், இதற்கான காரணம் சிலர் பதுக்கிவைத்திருப்பது தானென்று சொன்னர் இக்கேள்விக்குப் பதிலளிப்பதற்கு மந்திரி அங்கில்லாமல் போய்விட்டார்.

சபை நாளை காலைவரை ஒத்திவைக்கப்பட்டது.

தெல்லிப்பழை, வியா.

யூனியன் கல்லூரி வலைப்பந்தாட்டக் கோஷ்டிக்கும் பலாலி அரசினர் பயிற்சிக் கலாசாலைக் கோட்டிக்குமிடையே நடைபெற்ற வலைப்பந்தாட்டப் போட்டியில் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை 12—10 புள்ளிகளைப் பெற்று வெற்றிபெற்றது.

யூனியன் கல்லூரி மைதானத்தில் இப்போட்டி நடைபெற்றது.

## மரண அறிவித்தல்

புங்குடுதீவு 3-ம் வட்டாரம் காலஞ் சென்ற சிங்கப்பூர் பென்ஷனியர் தம்பு ஜேக்கப் அவர்களின் அருமை மனைவியும், புங்குடுதீவு மேற்கு அ. மி. பாடசாலை தலைமை ஆசிரியர் திரு, பொன்னையா அவர்களின் அருமைத் தாயாருமாகிய நாகமுத்து அவர்கள் காலமாகி விட்டார். அன்னரின் ஈமக்கிரியைகள் இன்று (வெள்ளிக்கிழமை) பகல் 12 மணியளவில் புங்குடுதீவு மயானத்தில் நடைபெறும்.

த. பொன்னையா.
(தலைமை ஆசிரியர்)

2157

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேலை வீதி [illegible] இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு மார்ச்மாதம் 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org